# “தர்மம் சர„

## “धर्मं चर„

ஆகஸ்ட் (15.08.2025) , பிரதி-12 -கும்பகோணம்


>>> ப்ரஹ்மஸ்ரீ குருராம கனபாடிகள் பேசுகிறார்

## >>> ஜாதகர்மா



இம்மையிலும் மறுமையிலும் நாம் நன்மையைப் பெறுவதற்காக நமது சாஸ்த்ரங்களில் அவசியம் செய்ய வேண்டியதாக விதிக்கப்பட்ட சரீர ஸம்ஸ்காரங்கள் 40. அவற்றுள் "ஜாதகர்மா" குழந்தை பிறந்தவுடன் முதல் சம்ஸ்காரம் ஆகும் .

இம்மாதிரி கர்மங்களில் கூறப்படும் மந்த்ரார்த்தங்களை உற்று நோக்கினால், அக்கர்மங்கள் எல்லாம் மிக அவசியம் என்பது சொல்லாமலே விளங்கும். **“दिवस्परि प्रथमं जज्ञे”** இத்யாதி மந்த்ர பலத்தால் பிறந்த குழந்தை, த்ருட சரீரம், நீண்ட ஆயுள், அளவு கடந்த பொருள், அழியாப்புகழ், கூர்மையான புத்தி முதலியவற்றுடன் வளர வேண்டும் எனப் ப்ரார்த்திக்கப்படுகிறது. இவற்றையெல்லாம் பெறுவதற்கு நாம் அனைவரும் விரும்புகிறோம்.

**"இதன் முக்கிய கருத்து என்ன?"** -உடல் வளம் உள்ளத்தூய்மை இவை இரண்டும் இருந்தால்தான், நாம் செய்யக்கூடிய விஷயங்கள் பூரணமான பலத்தை தரும். ஸம்ஸ்கார ஸம்பன்னனாக இருந்தால்தானே அனுஷ்டானம் செய்யமுடியும். ஏகாக்ர சித்தத்துடன் கர்மானுஷ்டானம் செய்ய வேண்டுமானால் உடல் வளமும் உள்ளத்தூய்மையும் மிகவும் அவசியமாகிறது. அவற்றை பிறந்த குழந்தைக்கு அளிப்பதற்காக செய்யப்படும் முக்கியமான ஒன்று ஜாதகர்மா.

**இன்னும் அறிவோம்.**

பிரதி-12


# சரணாகதி

**ஸ்ரீமதி ஸௌம்யா குருராமன்**



புத்தியைப் படுக்கப் போடுகிறதுதான் சரணாகதி. அதற்கு அடையாளமாகத்தான் பௌதிக கார்யமாக, 'ஸிம்பாலி'க்கா நமஸ்காரம் என்று ஆக்கிக் கொடுத்திருக்கிறது.

புத்தி என்று மூளையை ஸம்பந்தப்படுத்தித்தானே சொல்கிறோம்? பாதத்துக்கு மேலே எட்டாம் சாணாகத் தலையுச்சியிலிருக்கிற அந்த மூளையை பூமி மட்டத்தில் படியவிட்டுத்தானே கீழே விழுந்து நமஸ்காரம் பண்ணுகிறோம் 'கீழ்ப்படிதல்' என்ற உள்பாவத்திற்கே நமஸ்காரம் வெளியடையாளம். வேதத்திற்கு, வேதத்தின் பரம தாத்பர்யமான ஈச்வரனுக்கு, மூளை கீழ்ப்படியும் சரணாகிதக்கு அடையாளமாக சரீரம் கீழே பூமியில் படியும் படிக் கிடக்கிறதே நமஸ்கார க்ரியை.வேத - சாஸ்த்ரம் சொல்வதுதான் சத்யம் என்று நமக்கு நம்பிக்கை இருக்க வேண்டும் . அதற்குத்தான் 'ச்ரத்தை' என்று பெயர். அந்த ச்ரத்தையை மூலதனமாகக் கொண்டால் அது நம்மைக் கொண்டு போய் நிறுத்தும் பரிபூர்ணமான கீழ்ப்படிதலுக்கே 'சரணாகதி' என்று பெயர். **இன்னும் அறிவோம்.**



“அடிப்படை தர்மங்கள்”

**வித்வான் விரூபாக்ஷ சர்மா**

## ஆசமன விதி

வடக்கு, வடகிழக்கு, கிழக்கு இவைகளுள் ஒரு திக்கை நோக்கி உட்கார்ந்து , இரு கைகளையும் இரண்டு முழங்கால்களுக்குள்ளாக வைத்துக்கொண்டு,வலது கையை பசுவின் காதுபோல் வைத்துக்கொண்டு அதில் உளுந்து முழுகும்படியான தீர்த்தமெடுத்து மூன்றுதடவை ஆசமனம் செய்ய வேண்டியது. தெற்கு, அல்லது மேற்கு முகமாக இருந்து ஆசமனம் செய்யக்கூடாது .

ஸ்ரீ சர்மா சாஸ்திரிகள்



# சந்தேகங்களும் சமாதானங்களும்

## ஸாயங்காலத்தில் அர்க்யப்ரதானம் பூமியிலா ஜலத்திலா?

**ஸமாதானம்:-** இரண்டும் சாஸ்த்ர ஸம்மதம். பூமியில் உட்கார்ந்துகொண்டால் அர்க்யப்ரதானம் பூமியில் செய்யவேண்டும். ஜலத்தில் நின்றுகொண்டால் ஜலத்திலேயே அர்க்யப்ரதானம் செய்யவேண்டும்.ஆச்வலாயனிகள் ஸாயங்காலத்தில் நின்றுகொண்டு பூமியில் அர்க்யம் விடவேண்டும். பாக்கி இரண்டு காலங்களில் நின்று கொண்டு ஜலத்தில் விடவேண்டும்.

## ஜீவ ப்ரஹ்ம ஐக்யம்

வேங்கடேஷ்- பூர்வமீமாம்ஸா சிரோமணி



**ஜீவ ப்ரஹ்ம ஐக்யம்** அல்லது **ராம ஆஞ்சநேய ஆலிங்கனம்** இரண்டும் ஒன்றுதான் லங்கையிலிருந்து வெற்றிகரமாக பிராட்டியை தரிசித்து பெருமாளுடைய சந்தேஷத்தை கொடுத்து திரும்பிய ஆஞ்சனேய ஸ்வாமியை பெருமாள் சந்தோஷம் தாங்காமல் ஆலிங்கனம் பண்ணிக்கொண்டார். மஹான் ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதரின் பேரனான பிரசித்தமான பக்த கவி நீலகண்ட தீக்ஷிதர் அவர்கள் ரகுவீரஸ்தவம் என்ற ஸ்தோத்திரத்தில் இதை அத்வைத பரமாக இப்படி அன்வயப்படுத்துகிறார்.

नित्यम् सुशुप्तिषु परिश्वजसे न राम भूतानि किम् निखिलभूतगुहाषयस्त्वम्।
आसाद्य तत् प्रकटम् अर्थम् अवाप कीर्तिम् आचन्द्रतारविमलाम् अनिलात्मजन्मा॥

**ராம** - ஹே ராமா, **நிகிலபூதகுஹாஷயஸ்த்வம்** - உலக பூதர்களின் ஹ்ருதய குகையில் வசிக்கும் (சாக்ஷாத் ப்ரம்மனான நீ..) **நித்யம் சுசுப்திஷு** - தினசரி சுசுப்தியில் (ஆழ்ந்த உறக்கத்தில் **பூதானி** - எல்லா உயிர்களையும் **பரிச்வஜஸே ந ராம** - அணைப்பதில்லையா ராமா? **தத் அர்த்தம்** - அந்த செல்வம் (ஆசிர்வாதம்) **ப்ராக்தம்** - திறந்தபடி (அதாவது முழித்திருக்கும்போது)**ஆஸாத்ய** - கிடைக்கும் **அநிலாத்மஜன்மா** - வாயுபுத்ரனான ஹனுமான் **ஆசந்த்ர தாரவிமலாம்** - சந்திர நட்சத்திரங்களுள்ளவரை (அதாவது சிரஞ்சீவியாய்) அப்பழுக்கற்று... **கீர்த்திம்** - புகழை **அவாப** - அடைந்தார்.

ஒவ்வொரு ஜீவனும் ஆழ்ந்த உறக்கத்தில் பரப்பிரும்மத்துடன் ஐக்கியமாவதாக உபநிஷதங்கள் சொல்கின்றன. ஆனால், அவர்கள் இதை அறியாமல், விழித்தெழும்போது மீண்டும் வாசனை, கர்மா கட்டுண்ட ஜீவர்களாகவே எழுகிறார்கள். அப்படி ஒருவன் விழித்திருக்கும்போதே, பிரும்மத்துடன் கலந்தால் - அதாவது தன் பிரும்ம உருவை உணர்ந்தால் - அதுவே மோட்சமாகும். பரப்பிரும்மமான ராமன் அனுமனை ஆலிங்கணம் செய்து இந்த உயர்ந்த பதவியை கொடுத்தான். இதுவே ராமாஞ்சநேய ஆலிங்கனத்தின் ரகசியம்.

இன்னும் அறிவோம்.

## நமது பாடசாலையில் யஜுர் உபாகர்மா மற்றும் காயத்ரி ஜபம் சிறப்ப்பக நடைபெற்றது





## நமது பாடசாலையில் சுதந்திர தினம் நன்முறையில் அனுஷ்டிக்கப்பட்டது



**"இந்தத் தலைமுறையைச் சேர்ந்த நாம், தலைமுறை தலைமுறையாகப் பின்பற்றப்பட்டு வரும் வேதப் படிப்புச் சங்கிலியில் ஒரு முறிவை ஏற்படுத்தாமல் நமது சந்ததியினர் வேதங்களைக் கற்கும் வாய்ப்பை ஏற்படுத்தித்தருவோம் .**

